**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 20/2023**

**பி.வா.சா.1 – சந்திரன்**

**27–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்கத்தெரியும். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்துகொண்டேன். வாதியை கட்டுமானம் கட்டுவதை தடுப்பதாக இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளார். எனது பிரமாணவாக்குமூலத்தில் 2016 ல் வீடு கட்டுவதற்காக வாதி நிலத்தை கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 19.12.2022 ல் நான் மாவட்ட ஆட்டிசியரிடம் கொடுத்த புகாரில் வாதி பல ஆண்டுகளாக வாடகைக்கு குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் 4, 5 ஆண்டுகளாக தான் வாதி அங்கு குடிசைபோட்டு இருக்கிறார். அதற்கு முன்பு அது காலி இடமாகதான் இருந்தது.

2. குடிசையின் அளவு என்ன என்றால் அளவு சரியாக தெரியாது. 10 X 16 இருக்குமா என்றால் 10 X 16 குல் இருக்கும். எந்த தேதியில் வாதி கட்டாய மதம்மாற்றம் செய்ய முயற்சி செய்தார் என்ற விபரத்தை எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும், நான் வாதியை கேட்டதாக சொல்லும் தேதி பொய் என்றும் அதனால் தான் என்னால் தேதியை குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. நான் கட்சியில் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் நான் எந்த கட்சியிலும் இல்லை. பிரச்சினை நடந்த சமயத்தில் இந்து முன்னணியில் உறுப்பினராக இருந்தேனா என்றால் இல்லை.

3. பிரச்சினை நடந்த சமயத்தில் இந்து முன்னணி கட்சியில் பொறுப்பாளராக இருந்தேன் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பகுதியில் அனைத்து மதத்தை சேர்ந்தவர்களும் குடியிருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள். அந்த பகுதி சுமார் 900 வீடு இருக்குமா என்றால் இருக்கும். அந்த பகுதியில் ஊர் கட்டுப்பாடு இல்லை என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.2 சி.எஸ்.ஆரில் புகார் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் ஊர் பொதுமக்கள் சார்பாக புகார் கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான், ஆனால் நான் ஊர் பொதுமக்கள் சார்பாகதான் கொடுத்தேன்.

4. பி.வா.சா.ஆ.2 ல் அவ்வாறு இல்லை என்பதால் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ல் நூற்றுக்கும்மேற்பட்ட அடையாளம் தெரியாது ஆட்கள் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு சம்பவம் நடக்காததால்தான் என்னால் ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ன் மீது மேல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். காவல் துறையில் மேல் அதிகாரியிடம் தான் நான் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும் என்றும், பொய் புகார் என்பதால்தான் அவ்வாறு எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரிடம் நான் கொடுத்ததாக சொல்லும் புகாரில் பிரதிவாதி 4, 5, 7, 8 ன் பெயர் இல்லை என்றால் சரியல்ல.

5. இந்து முன்னணியின் பொறுப்பில் இருப்பதால் என்னை சார்ந்த நபர்கள் மூலம் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தேன் என்றால் நான் எந்த கட்சியிலும் இருந்தது இல்லை. வாதியை நான்கு ஆண்டுகளாக தெரியும். வாதி அங்கு குடியிருப்பதால் அவரது குடும்பத்தைப்பற்றி எனக்கு நன்கு தெரியும்

என்றால் அவர் அங்கு குடியிருக்கவில்லை. அவர் வெளியே குடியிருக்கிறார், அவ்வப்போது அங்குவந்து செல்வார். பிரச்சினை நடந்த சமயத்தில் வாதி அங்கு குடிசை அமைத்து வசித்து வந்தபோது அவரது குடும்பத்தைப்பற்றி எனக்கு தெரியும் என்றால் அவர் அங்கு குடியிருந்தது இல்லை. வாதி மற்றும் அவரது குடும்பத்தைப்பற்றி எனக்கு நன்கு தெரிந்தும், தற்போது அவர்கள் குடியிருக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டச்சியர் மனுவில் நான் மனுதாரர் இல்லை என்றால் சரியல்ல.

6. நான் அதில் மனுதாரர் இல்லை என்றும், அங்கு நடைபெற்ற விசாரணைக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இருதரப்பிலும் விசாரணை செய்து மேற்கொண்டு பிரச்சினை வேண்டாம் என்று சமரசம் செய்து அனுப்பிவைத்தார்கள் என்றால் விசாரித்தார்கள் சமரசம் செய்யவில்லை. அவர்களை அனுமதி பெற்று ஜபம் செய்து கொள்ளலாம் என்றும், அதனையும் அவர்கள் வீட்டுக்குள் செய்துகொள்ளலாம், இங்கு செய்யக்கூடாது என்று சொன்னார்கள். வருவாய் கோட்டாச்சியர் ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய் கோட்டாச்சியரின் சமரசம் செய்த விபரம் எனக்கு நன்கு தெரிந்தும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி, குடி நீர் ரசீதுகளை நான் பார்தேனா என்றால் நான் பார்க்கவில்லை.

7. முறைப்படி வாதி வாடகைவீட்டில் குடியிருந்து பின்னிட்டு கிரையம் பெற்று வீட்டு வரி, குடி நீர் வரி ஆகியவற்றை அவர் பெயருக்கு மாற்றியுள்ளார் என்றால் அவர் அங்கு குடியில்லை. மேற்படி ரசீதுகளை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் குடிசை வீட்டில் வாதி குடியிருந்ததர்கான ஆவணத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் பொய் ஆவணம். மேற்படி ஆவணம் உண்மை

என்பதால்தான் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி அங்கு உள்ள அனைத்து மக்களுடன் தற்போது நல்ல உறவுடன் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. மதமாற்றம் செய்ததால் பிரச்சினை தான் தேடிவைத்துள்ளார்.

8. வாதி எந்த நடவடிக்கையும் நான் சொல்வதுபோல் செய்யவில்லை என்றும், அவ்வாறு செய்திருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கும் என்றும், எனது சுய நலத்திற்காக இப்பிரச்சினையை உறுவாக்குகிறேன் என்றால் சரியல்ல. பெருமாநால்லூர் காவல் நிலையத்தில் இருந்து இரண்டு வாரம் கவனித்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். காவல் துறை கவனித்த வகையில் வாதி அவரது வீட்டில் ஜபம் மட்டும்தான் செய்ததாலும் மதம் மாற்றம் எதுவும் செய்யாததாலும் தான் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி குடியிருப்பதற்காக தான் வழக்கு சொத்தை கிரையம் பெற்று கட்டுமானப்பணியை மேற்கொண்டார் என்றும், நான் இந்து மன்னணியில் பொறுப்பில் இருக்கும் காரணத்தினால்தான் அந்த பகுதி மக்களிடம் வேண்டும் என்றே பணம் வாங்கும் நபராக இருந்து வாதியின் கட்டிடத்தை வேண்டும் என்றே நிறுத்தினேன் என்றால் சரியல்ல.

9. 900 க்கும் மேற்பட்ட நபர்கள் குடியிருந்தும் என்னுடம் சேர்ந்த 10 நபர்களைகொண்டு மட்டும் வாதியிடம் பிரச்சினை செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு அவப்பெயரை உண்டாக்கவேண்டும் என்று பிரச்சினை செய்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் சர்ச் கட்டக்கூடாது என்று பிரச்சினை செய்கிறேன் என்றால் மதம் மாற்றம் செய்யக்கூடாது என்று தான் பிரச்சினை செய்கிறேன். அப்போது சர்ச் கட்டுவது பிரச்சினை இல்லை என்றால் பிரச்சினை உள்ளது. அங்கு வீடு கட்டுவதில் எனக்கு பிரச்சினை இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வாதி வீடு கட்டுவதை நான் தடுக்ககூடாது

என்று தான் பரிகாரம் கோரியுள்ளார் என்றும், அதனை தடுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் வீடு கட்டுவதற்கு பிரச்சினை இல்லை, சர்ச் கட்டுவதுதான் பிரச்சினை.

10. 23 செண்ட் இருந்தால் தான் சர்ச் கட்ட முடியும் என்றால் பொது மக்களிடம் முதலில் வீடு கட்டுவேன் என்றும் அதன் பிறகு சர்சாக மாற்றுவேன் என்று சொல்லியுள்ளார். சர்ச் கட்டுவதற்கு வாதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், குடியிப்பதற்காகதான் கட்டுமானம் கட்டுகிறார் என்றும், அதனை தடுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.27 16:01:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.